Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை | 180 | உள்ளூர் - 29.06.2026 | திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue | 180 | வெளியூர் - 30.06.2026 | செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**கஷ்டங்கள் விலகும் சக்தி மிகு பரிகாரங்கள்!**

**AIIMS–ல் 2668 காலிப்பணியிடங்கள்!**

**கரூரில் முதல்வர் / லண்டனில் மு.க.ஸ்டாலின்**

**வேலுமணி மீண்டும் போர்க்கொடி?**

# மோதலை நிறுத்த அமெரிக்கா - ஈரான் சம்மதம்..!

அமெரிக்கா, ஜூன். 29–

கடந்த வாரம் எட்டப்பட்ட ஈரான் – அமெரிக்கா புரிந்துணர்வு சீர்குலைந்து ஒரே வாரத்தில் மீண்டும் மோதல் வெடித்தது.

கடந்த வாரம் எட்டப்பட புரிந்துணர்வு படி, ஈரானிய துறைமுகங்கள் மீதான அமெரிக்க கடற்படை முற்றுகை நீக்கப்பட வேண்டும்.

அதற்குப் பதிலாக, ஹார்முஸ் ஜலசந்தியில் சர்வதேச வர்த்தகக் கப்பல்களுக்கு ஈரான் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

இருப்பினும், ஜலசந்தி வழியாகச் செல்லும் கப்பல்கள் தங்கள் அனுமதியைப் பெற வேண்டும் என்று ஈரான் வலியுறுத்துவதாலும், அமெரிக்கா அதை எதிர்ப்பதாலும் இந்த சர்ச்சை ஏற்பட்டது. தங்கள் அனுமதியின்றி நுழைந்ததாக வணிக கப்பல் ஒன்றை ஈரான் தாக்கியது.



இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா அந்நாட்டு ராணுவ உள்கட்டமைப்பு மீது தாக்குதல் நடத்தியது. பதிலடியாக பஹ்ரைன், குவைத் அமெரிக்க தளங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியது. மீண்டும் ஹார்முஸ் ஜலசந்தி மற்றும் அதனை சுற்றியுள்ள ஈரானின் ராணுவ உள்கட்டமைப்பை அமெ ரிக்கா குறிவைத்தது.

ஈரானின் ஏவுகணை மற்றும் டிரோன் சேமிப்புக் கிடங்குகள், மற்றும் அவர்களின் கடலோர ரேடார் தளங்கள் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுமழை பொழிந்தன.

இதனிடையே மீண்டும் முழுமையான போர் ஏற்பட்டால் ஈரான் என்ற நாடே இருக்காது என அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரித்திருந்தார்.

**பேச்சுவார்த்தை**

இந்தச் சூழலில், அமெரிக்கத் துணை அதிபர் ஜே.டி. வேன்ஸின் முன்முயற்சியால் தற்போதைய பதற்றத்தை தணிக்க, கத்தார் தலைநகர் தோஹாவில் ஈரான் – அமெரிக்கா இடையே நாளை அவசர பேச்சுவார்த்தை நடைபெறும் என அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர். மேலும் இரு நாடுகளும் பரஸ்பர தாக்குதல்களை நிறுத்த ஒப்புக்கொண்டுள்ள தாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிக் ஸ்டீவர்ட் தலைமையிலான அமெரிக்க குழு தோஹா பேச்சுவார்த்தையில் நாளை பங்கேற்கிறது.

அமெரிக்க ராணுவத்திற்கும் ஈரான் புரட்சிகர காவல் படையினருக்கும் இடையே ஒரு தகவல் தொடர்பு ஹாட்லைனை நிறுவுவதும் தவறான புரிந்ததால் எதிர்கால கடல்சார் மோதல்களை தடுப்பதும் இந்தப் பேச்சுவார்த்தைகளின் முக்கிய நோக்கமாகும்.

தற்போதைய தாக்குதல்கள் நிறுத்தப்பட்டதால், ஹோர்முஸ் ஜலசந்தியில் வர்த்தகக் கப்பல் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.

# இந்திய பெருங்கடலை வாய்ப்புகளின் பெருங்கடலாக மாற்றுவதே நம் தொலைநோக்கு பார்வை - பிரதமர் மோடி

புதுடெல்லி, ஜூன். 29–

பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் கடல்சார் பாதுகாப்பு மற்றும் பொருளாதார செழிப்பை கொண்ட ஒரு இந்திய பெருங்கடலை இந்தியா நோக்கமாக கொண்டுள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுவானதாகவும், எதிர்காலத்திற்கு தயாரானதாகவும் மாற்றுவதற்கான வழிகள் குறித்து செஷல்ஸ் அதிபர் பேட்ரிக் ஹெர்மினியுடன் அவர் விவாதித்தபோது இவ்வாறு தெரிவித்தார்.

**பேச்சுவார்த்தை:**

அதிபர் ஹெர்மினியுடன் விரிவான பேச்சுவார்த்தை நடத்திய மோடி, இந்திய பெருங்கடல் "நமது பொதுவான இல்லம். அதன் பாதுகாப்பு, நிலைத்தன்மை



மற்றும் செழிப்பு ஆகியவை நமது கூட்டு பொறுப்பு" என்றும் தாங்கள் ஒப்பு கொண்டதாக கூறினார்.

ஹெர்மினியுடனான தூதுக்குழு அளவிலான பேச்சுவார்த்தைக்குப் பிறகு பேசிய மோடி, "இந்திய பெருங்கடலை வாய்ப்புகளின் பெருங்கடலாக மாற்றுவதே நமது தொலைநோக்குப் பார்வை" என்றார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது, இந்தியாவுக்கும் செஷல்ஸுக்கும் இடையிலான பொருளாதார கூட்டாண்மையை அவர்கள் ஆய்வு செய்ததுடன், தொழில்கள், இணைப்பு, தொழில்நுட்பம், டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் பிற துறைகளில் உள்ள புதிய வாய்ப்புகள் குறித்தும் விவாதித்தனர்.

**பிரதமர் உரை:**

"இந்தியப் பெருங்கடல் நமது பொதுவான இல்லம் என்றும், அதன் பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் செழிப்பு ஆகியவை நமது கூட்டுப் பொறுப்பு என்றும் நாங்கள் நம்புகிறோம். இந்த உணர்வே நமது மகாசாகர் தொலைநோக்கு பார்வையின் அடித்தளமாக அமைகிறது.

நமது இரு நாடுகளின் தொழில்துறைகளுக்கான புதிய வாய்ப்புகளை நாங்கள் தொடர்ந்து ஆராய்வோம். இந்தியாவுக்கும் செஷல்ஸுக்கும் இடையிலான இணைப்பை மேம்படுத்துவதற்கும் நாங்கள் பணியாற்றுவோம். இது நமது இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல், கிழக்கு ஆப்பிரிக்கா மற்றும் இந்திய பெருங்கடல் பிராந்தியத்துடனான நமது உறவுகளையும் வலுப்படுத்தும்," என்று அவர் கூறினார்.

# எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்!

சென்னை, ஜூன். 29–

தமிழ்நாட்டில் இளநிலை மருத்துவ படிப்புகளான எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகளுக்கு திங்கள்கிழமை (ஜூன் 29) பிற்பகல் 12 மணி முதல் விண்ணப்பிக்கலாம் என மருத்துவ கல்வி இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் 2026–27 ஆம் கல்வியாண்டிற்கான இளநிலை மருத்துவப் படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் இன்று பிற்பகல் 12 மணி முதல் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

தமிழகத்தில் இளநிலை மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இணையதளத்தில் வெளியிட்டு பெறப்பட்டன. பல்வேறு காரணங்களால் நீட் தேர்வு முடிவு வெளியாவது தாமதம் ஏற்படும்போது, மாணவர்களின்



விண்ணப்பங்களுக்கான கால அவகாசம் மிகவும் குறைவதால், அவர்கள் சிரமத்துக்கு ஆளாகின்றனர்.

அதனால், இளநிலை மருத்துவ மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் இந்த ஆண்டும் முன்கூட்டியே பெற முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, திங்கள்கிழமை (ஜூன் 29) பிற்பகல் 12 மணி முதல் இளநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்புகளுக்கு www.tnmed–icalselection.org என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பக் கட்டணத்தை ஆன்லைனில் செலுத்திவிட்டு தேவையான சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் மாணவர்களின் நீட் தேர்வு மதிப்பெண்கள் தேசிய தேர்வு முகமை அளிக்கும் தரவுகளின் அடிப்படையில் சரிபார்க்கப்பட்டு இறுதி பட்டியல் வெளியிடப்படும் என கூறப்படுகிறது.

நீட் தேர்வு முடிவுகள் வெளியாவதற்கு முன்பே தமிழ்நாட்டில் விண்ணப்பதிவு தொடங்குகிறது. விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் கூடுதல் வழிகாட்டுதல்களை மருத்துவக் கல்வி இயக்ககம் விரைவில் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் இளங்கலை மருத்துவ மற்றும் பல் மருத்துவப் படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள், அவ்வப்போது அதிகாரப்பூர்வ இணையதளத்தைப் பார்வையிட்டுத் தகவல்கள் மற்றும் அறிவிப்புகளைத் தெரிந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## விரைவில்

# இ.பி.எப்.ஓ. 3.0: வரப்போகுது!

## இனி பி.எப். பணம் ஏடிஎம் கார்டில்!!

புதுடெல்லி, ஜூன். 29–

ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் கீழ் உள்ள 8 கோடிக்கும் அதிகமான உறுப்பினர்கள் விரைவில் தங்களுடைய பிஎஃப் பணத்தை யுபிஐ மற்றும் ஏடிஎம் வாயிலாக பெற இருக்கின்றனர். நீண்ட காலமாகவே தங்களுடைய பிஎஃப் பணத்தை எடுப்பதற்கு உறுப்பினர்கள் திணறி வந்தனர். காரணம் முதலில் அதற்கு ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். பிறகு நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டும். அதற்குள் உறுப்பினர் நிறுவனத்தின் சார்பில் ஒப்புதலும் பெற வேண்டும். இப்படி பல விஷயங்களை செய்து பிஎஃப் பணத்தை பெறுவதற்கு சிரமமாய் இருந்து வந்தது. இதனால் அவசரத்திற்கு பணம் எடுப்பது இ.பி.எப்.ஓ. உறுப்பினர்களுக்கு அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. அதோடு இ.பி.எப். அமைப்பின் ஊழியர்களுக்கும் அதிகளவிலான காகிதப் பணிகள் இருந்தது. இதையெல்லாம் கவனித்த அமைப்பு இந்த இரண்டு வசதியையும் அறிமுகம் செய்ய இருக்கிறது.



கடந்த ஆண்டு முதல் இ.பி.எப்.ஓ. அமைப்பு தங்களுடைய டிஜிட்டல் சேவைகளை நவீனப்படுத்தும் நோக்கில் செயல்பட்டு வருகிறது. ஆட்டோ கிளைம் செட்டில்மெண்ட் வசதியையும் கொண்டு வந்துள்ளது. சில நாட்களாக பி.எப். பணம் எடுக்கும் செயல்முறை முன்பை விட வேகமாக இருக்கிறது. இதற்கு முன்னர் 10 நாட்கள் வரை காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது. ஆனால் இப்போது பெரும்பாலான கிளைம் கோரிக்கைகள் 3 முதல் 3 நாட்களுக்குள் முடிவடைந்து விடுவதாக தெரிவித்திருக்கிறது. யுபிஐ மற்றும் ஏடிஎம் வசதி எப்போது கிடைக்கும்?: மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சரான மன்சுக் மாண்டவியா விரைவில் இந்த சேவை வெளியிடப்படும் என்று அறிவித்திருக்கிறார். ஒரு சில அறிக்கைகளின் படி இந்த ஜூன் மாதம் முதல் ஜூலை மாத இறுதிக்குள் இந்த சேவை பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அதிகாரப்பூர்வ தகவல்கள் இன்னும் வெளியிடப்படவில்லை.

**எவ்வளவு பணம் எடுக்கலாம்?:**

பணம் எடுப்பதற்கு இ.பி.எப்.ஓ. அமைப்பு வரம்பை நிர்ணயித்துள்ளது. அதன்படி ஒரு இபிஎப்ஓ உறுப்பினர் தங்கள் பி.எப். பேலன்ஸில் 75% மட்டுமே எடுக்க முடியும். மீதமுள்ள 25% தொகை ஓய்வூதிய நிதியாக அந்தந்த உறுப்பினர்களின் கணக்கிலேயே இருக்கும். ஏடிஎம் வசதி எப்படி செயல்படுத்தப்படும்?: அறிக்கைகளின் படி இ.பி.எப்.ஓ. அமைப்பு ஒவ்வொரு உறுப்பினருக்கும் பிரத்தியேக ஏடிஎம் கார்டை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலமாக அவர்கள் நேரடியாக ஏடிஎம்மில் தங்கள் பிஎஃப் பணத்தை எடுக்க முடியும். விரைவில் இது குறித்த அறிவிப்பும் வெளியாகலாம்.

**யாருக்கெல்லாம் இந்த வசதி?:**

இந்த இரண்டு வசதியையும் பயன்படுத்த கண்டிப்பாக இபிஎஃப் உறுப்பினர்கள் தங்களுடைய ஆதார் நம்பரை யூஏஎன் நம்பருடன் இணைத்திருக்க வேண்டும். ஓ.டி.பி. அடிப்படையிலான சரிபார்ப்பு இதற்கு தேவைப்படும். அதற்கு கண்டிப்பாக உறுப்பினர்கள் பேன் நம்பர், சரியான IFSC கோட் மற்றும் சரிபார்க்கப்பட்ட வங்கி கணக்கு, மொபைல் நம்பர் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். உண்மையிலேயே மாதச் சம்பளக்காரர்களுக்கு இந்த பிஎஃப் தொகை தான் முதன்மையான சேமிப்பு. அவசர காலம் என்று வந்துவிட்டால் உடனடியாக தங்கள் பிஎப் பணத்தையே எதிர்பார்த்து இருந்த நபர்களுக்கு இந்த இரண்டு வசதியும் நிவாரணம் அளித்துள்ளது.

முன்பெல்லாம் அவசர மருத்துவ செலவுகள் ஏற்பட்டாலும் பத்து நாட்கள் வரை காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது. ஆனால் தற்போது வரவிருக்கும் இந்த புதிய வசதியின் காரணமாக தேவைப்படும் நேரத்தில் சட்டென பிஎப் பணத்தை எடுத்து பயன்படுத்த முடியும். சேமிப்பு என்பது அவசரத்திற்கு பயன்படுத்துவதற்கு தானே! அப்படி இருக்கையில் தேவையெல்லாம் முடிந்த பிறகு பணம் கிடைத்து என்ன பயன்? இவ்வளவு நாட்களாக இபிஎப் உறுப்பினர்களுக்கு இதுதான் பிரச்சினையாக இருந்தது. ஆனால் வரவிருக்கும் மாதங்களில் இந்த பிரச்சனை குறையும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.



த.வெ.க. ஆட்சி அமைந்து ஒரு மாதத்தை கடந்துள்ள நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கான மாநாடு தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் போலீஸ் டி.ஜி.பி. அனைத்து அரசுத் துறை செயலாளர்கள், மாவட்ட கலெக்டர்கள், போலீஸ் சூப்பிரண்டுகள், சரக டி.ஐ.ஜி.க்கள், ஐ.ஜி.க்கள், வனத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 29.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 15-ம் தேதி

## டாஸ்மாக் திறந்து வைத்து... போதை ஓட்டுநர்களை மட்டும் தண்டிப்பது தீர்வா?




தமிழகத்தில் சாலை விபத்துகளால் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாகின்றன. அவற்றில் கணிசமான பகுதி, மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படுவதாக காவல்துறையின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதனால், போதை ஓட்டுநர்களை பிடித்து அபராதம் விதிப்பது, ஓட்டுநர் உரிமத்தை ரத்து செய்வது, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை போலீசார் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடவடிக்கைகள் சாலைப் பாதுகாப்பிற்கு அவசியமானவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், பொதுமக்கள் மனதில் தொடர்ந்து எழும் ஒரு கேள்விக்கு அரசு பதிலளிக்க வேண்டியுள்ளது. "மது விற்பனை செய்வது அரசே... அதே மதுவை அருந்தியவர்களை கைது செய்வதும் அரசே... இதில் முரண்பாடு இல்லையா?"

டாஸ்மாக் மூலம் தமிழக அரசுக்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வருவாய் கிடைக்கிறது. அந்த வருவாய் அரசின் நிதி ஆதாரங்களில் ஒன்றாக இருக்கலாம். ஆனால், அந்த வருவாய்க்காக சமூகத்தில் உருவாகும் பாதிப்புகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியது அரசின் பொறுப்பாகும். குடும்பச் சீரழிவு, உடல்நலப் பிரச்சினைகள், குடும்ப வன்முறை, சாலை விபத்துகள், இளைஞர்களின் எதிர்கால பாதிப்பு போன்றவை மதுப் பழக்கத்தின் சமூகச் செலவுகள் ஆகும்.

அதேநேரத்தில், போலீசாரின் நடவடிக்கையை குறை கூற முடியாது. ஏனெனில், மது அருந்துவது ஒருவரின் தனிப்பட்ட தேர்வாக இருந்தாலும், போதையில் வாகனம் ஓட்டுவது மற்றவர்களின் உயிருக்கு நேரடி அச்சுறுத்தலாகும். சாலையில் செல்லும் ஒரு பள்ளி மாணவன், அலுவலக ஊழியர் அல்லது முதியவர் எந்தத் தவறும் செய்யாமல், போதை ஓட்டுநரின் அலட்சியத்தால் உயிரிழக்கக் கூடாது. எனவே, குடித்துவிட்டு வாகனம் ஓட்டுபவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை கண்டிப்பாக தொடர வேண்டும்.

ஆனால் தண்டனை மட்டுமே நிரந்தரத் தீர்வாக இருக்க முடியாது. டாஸ்மாக் கடைகளின் அமைவிடம், விற்பனை நேரம், மதுவுக்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு மையங்கள், "குடித்தால் வாகனம் ஓட்டாதீர்கள்" என்ற விழிப்புணர்வு, இரவு நேர பொதுப் போக்குவரத்து, டாக்சி வசதிகள் போன்றவற்றையும் அரசு ஒருங்கிணைந்த கொள்கையாக செயல்படுத்த வேண்டும்.

சாலைப் பாதுகாப்பு என்பது போலீசாரின் பொறுப்பு மட்டுமல்ல; அது அரசின் கொள்கை, சமூகத்தின் விழிப்புணர்வு மற்றும் தனிநபரின் பொறுப்புணர்வு ஆகிய மூன்றின் கூட்டுப் பொறுப்பு.

மது விற்பனையால் வருவாய் கிடைப்பது முக்கியமா? அல்லது மனித உயிர்களைக் காப்பது முக்கியமா? என்ற கேள்விக்கு அரசு மட்டுமல்ல, சமூகமும் நேர்மையாக பதில் தேட வேண்டிய நேரம் இது.

"தண்டனை அவசியம்... ஆனால் தடுப்பதே சிறந்த தீர்வு!"

# வேலுமணி மீண்டும் போர்க்கொடி?



தொண்டாமுத்தூர், ஜூன். 29–

கடந்த வாரம், வேலுமணியை, கட்சியின் துணை பொதுச் செயலாளராக, பழனிசாமி நியமித்தார். முன்னாள் அமைச்சர் வேலுமணி, தனது சொந்த தொகுதியான தொண்டாமுத்தூர் தொகுதி, புதுப்பாளையத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், தனது ஆதரவாளர்களுடன், ஆலோசனைக் கூட்டம் நேற்று நடத்தினர்.

இக்கூட்டத்திற்கு, பத்திரிகையாளர்களை அனுமதிக்கவில்லை. இரண்டு மணி நேரத்திற்குமேலாக நடந்த கூட்டத்தில், அ.தி.மு.க., கட்சி கொடி, பேனர், பொதுச்செயலாளர் பழனிசாமியின் படம் என எதுவும் பயன்படுத்தவில்லை. மேடையில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா படம் மட்டும் இருந்தது. கூட்டம் முடிந்தபின், வேலுமணி, கட்சி நிர்வாகிகளுடன் உணவருந்தினார். 'எம்.ஜி.ஆர்., படம் உள்ளது' கூட்டத்துக்கு முன், வேலுமணி நிருபர்களிடம் கூறியதாவது:

பல ஆயிரம் ஓட்டுகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற வைக்க நிர்வாகிகள் உழைத்தனர். அவர்களை சந்தித்து நன்றி தெரிவிப்பதற்காக மட்டுமே வந்துள்ளேன். நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்த பின், அவர்களுடன் உணவு அருந்த உள்ளேன். வரும், 2ம் தேதி, எம்.எல்.ஏ., அலுவலகம் செல்ல உள்ளேன். அதற்குமுன் நிர்வாகிகளை சந்திப்பதற்காக வந்துள்ளேன்," என்றார்.

அ.தி.மு.க., கொடி, பேனர் இல்லாதது குறித்த கேள்விக்கு, " எங்க தலைவர், அம்மா (எம்.ஜி.ஆர்., – ஜெயலலிதா) படம் உள்ளது," என தெரிவித்தார்.

**'உங்கள் முடிவே எனது முடிவு'**

கூட்டத்தில் பங்கேற்ற அ.தி.மு.க., நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: வேலுமணி, தனது ஆதரவு எம்.எல்.ஏ.,க்களுடன், த.வெ.க.,வுக்கு ஆதரவு அளித்தது ஏன் என கட்சி நிர்வாகிகளுக்கு விளக்கினார். அதில், தி.மு.க.,வை எதிர்த்து, எம்.ஜி.ஆர்., ஆரம்பித்த அ.தி.மு.க.,வை தி.மு.க.,வுடன் கூட்டணி அமைக்க முயற்சித்தார்கள். அதற்கு எதிர்ப்பு தெரிவித்தேன். த.வெ.க.,வும் தி.மு.க.,வை எதிர்த்தது. அதனால், வெளியில் இருந்து ஆதரவு தெரிவித்தேன். அதற்காக, ஆதரவு தெரிவித்த மாவட்டச் செயலாளர்களை பதவியில் இருந்து நீக்கியுள்ளார். எனக்கு மாவட்ட செயலாளர் பதவி வழங்காவிட்டாலும் சரி. கட்சியின் வளர்ச்சிக்காக நீண்ட காலம் உழைத்தவர்களுக்கு, மீண்டும் அதே பதவி வழங்க வேண்டும் என வலியுறுத்தி பொதுச்செயலாளருக்கு கடிதம் எழுத உள்ளேன். அவர்களுக்கு பதவி வழங்காவிட்டால், எனக்கும் எந்த பதவியும் வேண்டாம். நான் எந்த வழியில் பயணிக்க வேண்டும் என, தொகுதி நிர்வாகிகள் மற்றும் மக்கள் எடுக்கும் முடிவே எனது இறுதி முடிவு. செங்கோட்டையன், ஓ.பன்னீர்செல்வம், ஜே.சி.டி., பிரபாகர் ஆகியோரை நீக்கும்போதே வேண்டாம் என தடுத்தேன். அதை பழனிசாமி கேட்கவில்லை. சட்டசபை தேர்தலில் சரியான கூட்டணி அமைக்காததே தோல்விக்கான காரணம் என, வேலுமணி தெரிவித்தார். அதன்பின், கட்சி நிர்வாகிகளிடமும் அவர்களது கருத்தை கேட்டறிந்தார். இவ்வாறு, அ.தி.மு.க., நிர்வாகிகள் தெரிவித்தனர்.



ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஒன்றியம், தில்லையேந்தல் ஊராட்சிக்குட்பட்ட 500 பிளேட்டு 200 பிளேட் இந்திரா நகர் வைரம் கார்டன் உள்ளிட்ட பகுதிகளில் 3,000–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் சாலை, தெருவிளக்கு, பாதாளச் சாக்கடை, ரேஷன் கடை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி அவதிப்படுவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். ரேஷன் பொருட்கள் வாங்க 5 கி.மீ.க்கும் மேல் பயணிக்க வேண்டிய நிலை இருப்பதாகவும், புதிய அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மாநிலங்களின் கஜானாவை நிரப்பும் மதுபான விற்பனை!

புதுடெல்லி, ஜூன். 29–

மதுபான விற்பனை மீதான கலால் வரி மூலம் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் வருவாய் நடப்பு நிதியாண்டின் முதல் இரண்டு மாதங்களில் (ஏப்ரல்–மே) 82 சதவீதம் வரை அசுர வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.



தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் வெளியிட்டுள்ள 10 முக்கிய மாநிலங்களின் மாதாந்திர நிதி ஆதாரப் புள்ளிவிவரங்களின்படி, அதிகபட்சமாக அரியானா மாநிலம் 82 சதவீதத்திற்கும் மேலான வருவாய் வளர்ச்சியைக் கண்டுள்ளது.

அதே நேரத்தில், ஒட்டுமொத்த வருவாய் அளவில் உத்தரப் பிரதேசம் ரூ.10 ஆயிரத்து 600 கோடிக்கும் மேல் வருவாய் ஈட்டி முதலிடத்தைப் பிடித்துள்ளது. நாடு முழுவதும் மதுபான நுகர்வு மற்றும் விற்பனை 14 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் கடந்த ஆட்சியில் நடைபெற்ற கனிம வள முறைகேடுகள் குறித்து மணல் லாரி உரிமையாளர்கள் சம்மேளனம் கோரிக்கை!

நாமக்கல், ஜூன். 29–

நாமக்கல்லில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், தமிழ்நாடு மணல் லாரி உரிமையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் செல்ல ராஜாமணி கூறியதாவது:

தமிழகத்தில் அனுமதியின்றி மணல் மற்றும் கனிம வளங்கள் வெட்டியெடுக்கப்பட்டு, போலியான டிரான்சிட் பாஸ் மற்றும் அனுமதி சீட்டுகள் மூலம் கிராவல் உள்ளிட்ட கனிமங்கள் கடத்தப்பட்டதால் அரசுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து பலமுறை அரசு கவர்னர், முதல்வர், தலைமை செயலாளர் மற்றும் அதிகாரிகளிடம் மனுக்கள் அளித்தும், கடந்த ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



சட்டவிரோத கனிமக் கடத்தல் குறித்து புகார் அளித்ததால், புகாரை வாபஸ் பெறுமாறு மிரட்டுகின்றனர். கனிமவளக்கொள்ளைக்கு எதிராக போராட்டம் நடத்திய எங்கள் மீது கடந்த ஆட்சியில் போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

சில குவாரிகளில் ஒரு லோடுக்கு ரூ.2 ஆயிரம் வரை மாமூல் வசூல் செய்து, லாரிகளுக்கு போலியான டிரான்சிட் பாஸ்கள் வழங்கப்படுகின்றன. இதனால் மணல் லாரி உரிமையாளர்களும், டிரைவர்களும் வழக்குகளில் சிக்கி அதிக அளவில் அபராதம் செலுத்த வேண்டியுள்ளது.

கனிம வளங்களை முறையாக நிர்வகித்தால் தமிழக அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 50 ஆயிரம் கோடி வரை வருவாய் கிடைக்கும். எனவே சட்டவிரோத குவாரிகள், ஓவர்லோடு போக்குவரத்து, போலி டிரான்சிட் பாஸ், அரசியல் நிதி வசூல் உள்ளிட்ட அனைத்து குற்றச்சாட்டுகள் குறித்தும் முழுமையான விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், குவாரி உரிமையாளர்கள் மற்றும் பொறுப்பில் இருந்த முன்னாள் அமைச்சர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறினார்.



நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய போலியோ சொட்டு மருந்து முகாமை, மாண்புமிகு வணிகவரித்துறை மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் த.லோகேஷ் தமிழ்ச்செல்வன், M.B.A., குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி தொடங்கி வைத்தார். மேலும், குழந்தைகள் ஆரோக்கியமாக வளர அனைவரும் தங்களது குழந்தைகளுக்கு தவறாமல் போலியோ சொட்டு மருந்து வழங்க வேண்டும் என பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

## திருந்திய நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறும் விவசாயிகள் மாநில விருதுக்கு விண்ணப்பிக்கலாம்; கலெக்டர் தகவல்!

நாமக்கல், ஜூன். 29–

திருந்திய நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறும் விவசாயிகள் மாநில விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

இது குறித்து, நாமக்கல்மாவட்ட ஆட்சியர் மதுபாலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

உயரிய தொழில் நுட்பத்தை கடைப்பிடித்து, திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், மாநிலத்தில் அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு, நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது அறிவிக்கப்பட்டு, அதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தமிழக அரசால் வெளியிடப்பட்டு ள்ளது. இப்போட்டியில், மாநில அளவில் முதலிடம் பெறும் விவசாயிகளுக்கு, சிறப்பு பரிசு மற்றும் பதக்கம் வழங்கப்படும். போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிக்கு, குறைந்தபட்சம், 2 ஏக்கர் நிலம் சொந்தமாகவோ அல்லது குத்தகையாகவோ வைத்து, திருந்திய முறையில் நெல் சாகுபடி செய்திருக்க வேண்டும்.

மேலும், பயிர் விளைச்சல் போட்டியில் குறைந்தபட்சம், 2 ஏக்கர் பரப்பு பயிர், நடுவர்கள் முன்னிலையில் அறுவடை செய்யப்படும். இப்போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள், அரசால் அங்கீகரிக்கப்பட்ட நெல் ரகங்களை மட்டுமே பயிர் செய்திருக்க வேண்டும்.




இத்திட்டத்தில் பங்கு பெற விரும்பும் விவசாயிகள், தங்களது வட்டார வேளாண் உதவி இயக்குனரை அணுகி, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன், பதிவு கட்டணமாக ரூ. 150 செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். வெற்றியாளர்களை அறிவிப்பதில் வேளாண் இயக்குனர் தலைமையிலான, மாநில அளவிலான குழுவின் முடிவே இறுதியானது. மேலும், இது தொடர்பான விபரத்தை பெற, தங்கள் பகுதி வட்டார வேளாண் உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


## ஐ.ஆர்.சி.டி.சி. சார்பில் "காசி தீர்த்த யாத்ரா சிறப்பு ரயில்"



சென்னை, ஜூன். 29–

இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகம் (ஐஆர்சிடிசி) சார்பில், "காசி தீர்த்த யாத்ரா "என்ற பெயரில் பாரத் கவுர சுற்றுலா ரயில் இயக்கப்படவுள்ளது. இந்த ரயில் திருநெல்வேலியில் இருந்து செப்.9–ம் தேதி புறப்படுகிறது. இந்த ரயில் விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருச்சி, விருத்தாசலம், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை வழியாக கயா, காசி (வாரணாசி), பிரயாக்ராஜ், அயோத்தி ஆகிய இடங்களுக்கு பயணிகள் அழைத்து செல்லப்பட உள்ளனர்.

இந்த ரயில் செப்.17–ம் தேதி திருநெல்வேலியை மீண்டும் அடைகிறது. இந்த ரயிலில் ஒரு ஏசிஇரண்டடுக்கு பெட்டி, 7 மூன்றடுக்கு ஏசி பெட்டிகள், 3 தூங்கும் வசதிகொண்ட இரண்டாம் வகுப்பு பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் விவரங்களுக்கு ஐஆர்சிடிசிஇணையதளத்தில் அறியலாம். இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கஷ்டங்கள் விலகும் சக்தி மிகு பரிகாரங்கள்!



தீராத கடன் தொல்லை, திருமணத் தடை, தொழில் நஷ்டம் என எத்தகைய கிரக தோஷமானாலும் சரி.. இதோ நமது மகான்கள் மற்றும் ரிஷிகள் சொன்ன சக்தி வாய்ந்த எளிய பரிகாரங்கள்.

**பயன் :**இந்தக் கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ள பரிகாரங்களைச் சரியாகப் பின்பற்றுவதன் மூலம் உங்கள் குடும்பத்தில் உள்ள சாபங்கள் நீங்கி, ஐஸ்வர்யமும் நிம்மதியும் பெருகும் என்பது உறுதி."

வாழ்க்கையில் சில நேரங்களில் எவ்வளவுதான் உழைத்தாலும் பலன் கிடைக்காமல் போகலாம். இதற்குக் கிரக தோஷங்கள் அல்லது முன்வினைப் பயன்கள் காரணமாக இருக்கலாம். "விதியை மதியால் வெல்லலாம்" என்பார்கள். அந்த 'மதி' என்பது இங்கே இறைவனின் அருளைப் பெறும் பரிகார முறைகளே. அப்படிப்பட்ட அற்புதப் பரிகாரங்கள் இதோ!

**1. குலதெய்வக் குற்றம் நீங்க...**

வீட்டில் தீபம் ஏற்றும்போது வாழைத் தண்டு திரி போட்டு தீபம் ஏற்றினால், குலதெய்வக் குற்றம் மற்றும் குலதெய்வச் சாபம் முழுமையாக நீங்கும். தினமும் சுந்தர காண்டத்தில் ஒரு அத்தியாயம் பாராயணம் செய்வது சகல கிரக தோஷங்களுக்கும் மிகச்சிறந்த மருந்தாகும்.

**2. காரிய சித்தியும்.. வழக்கு வெற்றிகளும்!**

சிவன் கோவில் மரங்கள்: சிவன் கோவிலில் உள்ள வன்னி மரம் அல்லது வில்வ மரத்தை 21 முறை வலம் வந்து உங்கள் குறைகளைக் கூறினால், வழக்குகள் உங்களுக்குச் சாதகமாகும்.

சக்கரத்தாழ்வார் வழிபாடு: சக்கரத்தாழ்வார் சந்நிதியில் நெய் தீபம் ஏற்றி 12 முறை வீதம் 48 நாட்கள் சுற்றி வர பில்லி, சூனியம் நீங்கும். 21 செவ்வாய்க்கிழமைகள் தீபம் ஏற்றினால் வாராக்கடன் வசூலாகும்.

**3. கடன் தொல்லைகளுக்கு முற்றுப்புள்ளி**

ஸ்ரீ நரசிம்மர்: கொடிய கடன்களுக்கு ஸ்ரீ யோக நரசிம்மரையும், சாதாரண கடன் தொல்லைகளுக்கு ஸ்ரீ லட்சுமி நரசிம்மரையும் வழிபடுவது உடனடி பலன் தரும்.

இரட்டைப் பிள்ளையார்: ரோகிணி நட்சத்திரத்தன்று இரட்டைப் பிள்ளையாருக்குச் சந்தனக் காப்பு செய்து வழிபடக் கடன் பிரச்சனைகள் தீரும்.

**4. திருமணத் தடைகள் விலக...**

துர்க்கை வழிபாடு: ஹஸ்த நட்சத்திரத்தன்று துர்க்கைக்குச் சிவப்பு பட்டுச் சாற்றி, 27 எலுமிச்சை பழ மாலை அணிவித்து குங்கும அர்ச்சனை செய்து வர உடனே திருமணம் கூடி வரும்.

சிவ பெருமான்: மாதந்தோறும் உத்திர நட்சத்திரத்தன்று சிவனுக்குத் தொடர்ந்து 11 மாதங்கள் பால் அபிஷேகம் செய்து வரத் திருமணத் தடை விலகும்.

**5. ராகு கால பூஜையின் மகிமை**

துர்க்கை பூஜை: ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 – 6.00 ராகு காலத்தில் துர்க்கைக்கு விளக்கேற்றி வழிபடப் பிரார்த்தனைகள் நிறைவேறும்.

தாமரைத் தண்டு திரி: வெள்ளிக்கிழமை காலை ராகு காலத்தில் துர்க்கைக்குத் தாமரைத் தண்டு திரி போட்டு நெய் விளக்கேற்றினால் தெய்வக் குற்றம் நீங்கும்.

**6. தம்பதிகள் ஒற்றுமைக்கு...**

வெள்ளிக்கிழமை காலை ராகு காலத்தில் நாகராஜா சிலைக்கு மஞ்சள், குங்குமம் வைத்து செவ்வரளிப் பூ சாற்றி நெய் தீபமிட்டு அர்ச்சனை செய்ய கணவன்–மனைவி இடையே அன்னியோன்யம் பெருகும்.

**7. குழந்தைகள் கல்வியில் சிறக்க...**

சங்கடஹர சதுர்த்தியன்று விநாயகப் பெருமானுக்கு எருக்கம் திரி போட்டு விளக்கேற்றி வழிபட, உங்கள் பிள்ளைகள் கல்வியில் அபாரமான முன்னேற்றம் காண்பார்கள்.

**1. பரிகாரங்களை எப்போது தொடங்க வேண்டும்?**

பொதுவாக வளர்பிறையில் வரும் சுப நாட்களில் அல்லது அந்தந்த தெய்வங்களுக்கு உகந்த நட்சத்திர நாட்களில் தொடங்குவது விசேஷம்.

**2. பஞ்சகவ்யம் என்பது என்ன?**

பால், தயிர், நெய், கோமூத்திரம் மற்றும் பசுஞ்சாணம் கலந்த கலவையே பஞ்சகவ்யம். இதை வாரம் ஒருமுறை வீட்டில் தெளிக்க லக்ஷ்மி கடாட்சம் பெருகும்.

## மீண்டும் போர் தொடங்கினால் ஈரான் என்ற நாடே இருக்காது: டிரம்ப் கடும் எச்சரிக்கை!

வாஷிங்டன், ஜூன் 29–

அமெரிக்காஈரான் இடையேயான பதற்றம் மீண்டும் அதிகரித்துள்ள நிலையில், "முழுமையான போர் மீண்டும் தொடங்கினால், ஈரான் என்ற நாடே இருக்காது" என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.




ஹார்முஸ் நீரிணை தொடர்பான பதற்றம் மற்றும் அண்மைய தாக்குதல்களைத் தொடர்ந்து, ஈரான் மீண்டும் தாக்குதலில் ஈடுபட்டால் அமெரிக்கா கடுமையான ராணுவ நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இருப்பினும், இரு நாடுகளும் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடங்க ஒப்புக்கொண்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




## தண்ணீர் சரியாக குடித்தாலே ஆரோக்கியம் உங்கள் கையில்!”




உடலின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க தண்ணீரை சரியான முறையில் அருந்துவது மிகவும் முக்கியம்.

காலை எழுந்தவுடன் 12 டம்ளர் தண்ணீர் குடிப்பது உடலை புத்துணர்ச்சியடையச் செய்யும்.

ஒரே நேரத்தில் அதிகமாக குடிக்காமல், சிறிது சிறிதாக இடைவெளி விட்டு அருந்துவது நல்லது.

உணவு சாப்பிடுவதற்கு 2030 நிமிடங்களுக்கு முன் தண்ணீர் குடிக்கலாம்.

உணவுக்குப் பிறகு உடனே அதிக தண்ணீர் குடிக்காமல், சுமார் 2030 நிமிடங்கள் கழித்து அருந்துவது சிலருக்கு வசதியாக இருக்கும்.

தாகம் எடுக்கும் வரை காத்திருக்காமல், நாள் முழுவதும் தேவைக்கேற்ப தண்ணீர் குடிக்க வேண்டும்.

உடற்பயிற்சி, வெயில் வேலை அல்லது அதிக வியர்வை ஏற்பட்டால் கூடுதலாக தண்ணீர் அருந்த வேண்டும்.

நின்றுகொண்டு அவசரமாக குடிப்பதை விட, அமர்ந்து மெதுவாக அருந்துவது வசதியாக இருக்கும்.

சிறுநீரின் நிறம் இளமஞ்சளாக இருப்பது பொதுவாக போதுமான நீர்ச்சத்து இருப்பதற்கான ஒரு அறிகுறியாகக் கருதப்படுகிறது.

**எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும்?**

ஒரு நாளைக்கு அனைவருக்கும் ஒரே அளவு பொருந்தாது. வயது, உடல் எடை, காலநிலை, உடற்பயிற்சி மற்றும் உடல்நிலையைப் பொறுத்து தேவைகள் மாறுபடும். பொதுவாக பலருக்கு 23 லிட்டர் வரை தேவைப்படலாம். ஆனால் சிறுநீரக, இதய அல்லது கல்லீரல் நோய்கள் இருப்பவர்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி மட்டுமே தண்ணீர் அருந்தும் அளவை நிர்ணயிக்க வேண்டும்.

# ‘அதுமட்டும் வேண்டாம்’: அமைச்சர்களுக்கு முதல்வர் போட்ட தடை!



சென்னை, ஜூன். 29–

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த 17–வது சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று த.வெ.க. அரசு ஆட்சி அமைத்துள்ளது. அக்கட்சியின் தலைவர் விஜய், முதல்–அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார். அவரது அமைச்சரவையில் சொந்தக் கட்சியை சேர்ந்த 30 பேரும், கூட்டணி கட்சியை சேர்ந்த 4 பேரும் இடம்பெற்றுள்ளனர்.

இந்த நிலையில், தமிழகத்தின் நிதி நிலைமை தொடர்பான வெள்ளை அறிக்கை கடந்த 15–ந் தேதி வெளியிடப்பட்ட நிலையில், தொடர்ந்து மின் துறை வெள்ளை அறிக்கை கடந்த 25–ந் தேதி வெளியானது. கடந்த ஆட்சியாளர்களின் முறைகேடுகள், நிதி இழப்புகள் ஆகியவை இதில் கூறப்பட்டிருந்தன.

**தவறு எதுவும் நடந்துவிடக்கூடாது**

த.வெ.க. அரசு அமைந்த உடனேயே வெளிப்படையான நிர்வாகம், ஊழலற்ற ஆட்சி என்பதை தொடர்ந்து கூறிவருகிறது. இதனால்தான், கடந்த ஆட்சியாளர்களின் ஊழலை வெளிக்கொண்டு வருவோம் என்றும் அதற்கான ஆதாரங்களை திரட்டி வருகிறது. த.வெ.க. அமைச்சரவையில் கே.ஏ.செங்கோட்டையனை தவிர அத்தனை பேரும் புதியவர்கள். ஏன், முதல்–அமைச்சர் விஜயே புதியவர்தான்.

இப்படி, மொத்த அமைச்சரவையும் புதியவர்களை கொண்டிருப்பதால், தவறு எதுவும் நடந்துவிடக்கூடாது என்பதில் முதல்–அமைச்சர் விஜய் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறாராம். அதற்கு காரணமும் இருக்கிறது. முன்பு, தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்தால், அ.தி.மு.க. எதிர்க்கட்சியாக இருக்கும். அல்லது அ.தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்தால் தி.மு.க. எதிர்க்கட்சியாக இருக்கும். ஆனால், இப்போது த.வெ.க. ஆளுங்கட்சியாக இருக்கும் நிலையில், தி.மு.க. – அ.தி.மு.க. என்ற 2 எதிர்க்கட்சிகள் இருக்கின்றன.

**முதல்–அமைச்சர் விஜய் அமைச்சர்களுக்கு அறிவுரை**

இரட்டைக்குழல் துப்பாக்கியாக தி.மு.க. – அ.தி.மு.க. ஆகிய இருபெரும் கட்சிகளும் த.வெ.க.வை நோட்டமிட்டு வருவதால், அமைச்சர்களில் செயல்பாடு களில் எதுவும் தவறு நடந்தால், அதை பூதாகர மாக்கி விடுவார்கள் என்று முதல்–அமைச்சர் விஜய் நினைக்கிறாராம். அதனால்தான், அமைச்ச ர்களுக்கு அவர் தொடர்ந்து அறிவுரை வழங்கி வருகிறார். இதற்கிடையே, த.வெ.க. அமைச்சரவையில் உள்ள முக்கியமானவர்களை தங்கள் பக்கம் இழுக்கவும் பிரதான எதிர்க்கட்சி குதிரை பேரத்தில் ஈடுபட்டு வருவதாக பரபரப்பு தகவல்கள் வெளியாகி வருகின்றன. இது உண்மை என்றால், ஆட்சிகவிழும் அபாயமும் த.வெ.க. அரசுக்கு ஏற்பட்டுவிடும்.

**அமைச்சர்கள் குழு புகைப்படம் விஜய் போட்ட தடை**

இதுபோன்ற நிலையில்தான், அமைச்சர்களுக்கு முதல்–அமைச்சர் விஜய் தடை ஒன்றை பிறப்பித்துள்ளாராம். அதாவது, அடுத்த 6 மாதங்களுக்கு அமைச்சர்கள் யாரும், தினச் செலவு மற்றும் வழக்கமான கோப்புகளை தவிர வேறு எந்த புதிய கோப்புகளிலும் கையெழுத்து போடக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளாராம்.

கடந்த ஆட்சியில் முறைகேட்டில் ஈடுபட்ட ஒப்பந்ததாரர்கள் பலர், த.வெ.க. அரசையும் அணுகி வருவதால், அமைச்சர்கள் யாரும் தெரியாமல் அவர்களுக்கு ஒப்பந்தம் வழங்கிவிடக்கூடாது என்று முதல்–அமைச்சர் விஜய் இவ்வாறு தடை விதித்துள்ளாராம். பழையவர்களுக்கு எதுவும் ஒப்பந்தம் வழங்கப்பட்டால், அது புதிய அரசுக்கு பெருத்த தலைவலியை ஏற்படுத்தி விடும் என்பதால் இந்த முடிவாம். த.வெ.க. அரசின் அடுத்தக்கட்ட நகர்வு எப்படி இருக்கப்போகிறது என்பதை காத்திருந்து கவனிப்போம்.

# குதிரை பேர விவகாரத்தை போட்டுடைத்த வைகோ: முதல்வர் கடும் கோபம்!



சென்னை, ஜூன். 29–

ம.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்களை ராஜினாமா செய்ய, முதல்வர் விஜய் சொன்னதாக அக்கட்சி பொதுச்செயலர் வைகோ கூறியது, முதல்வர் விஜய்க்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

சட்டசபை தேர்தலில், 108 தொகுதிகளில் வென்ற தமிழக வெற்றிக் கழகம், ஆட்சி அமைப்பதற்கு, தி.மு.க., கூட்டணியில் இருந்த கட்சிகள் ஆதரவு அளித்து வருகின்றன.

கூட்டணி கட்சிகளை இழுத்ததால், த.வெ.க.,வை ‘சோபா மாடல்’ என, எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி விமர்சிக்கிறார்.

அ.ம.மு.க.,வில் வென்ற ஒரே எம்.எல்.ஏ.,வும் த.வெ.க., அரசுக்கு ஆதரவு அளித்ததால், குதிரை பேரம் நடப்பதாக அ.ம.மு.க., பொதுச்செயலர் தினகரன் குற்றம் சாட்டினார். பெரும்பான்மை பெறுவதற்காக, அ.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்களை ராஜினாமா செய்ய வைத்து, த.வெ.க., பக்கம் இழுப்பதால், ‘பொய்க்கால் குதிரை அரசு’ என, அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி கூறி வருகிறார். இதற்கு, த.வெ.க., அமைச்சர்கள் விளக்கம் அளித்து, மறுப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், ‘ம.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்களை ராஜி னாமா செய்ய சொல்லுங்கள்; அவர்க ளை வெற்றி பெற வைக்கிறேன்’ என, முதல்வர் விஜய் தன்னிடம் கூறியதாக வைகோ கூறியது, முதல்வர் விஜயை கோபமடைய செய்துள்ளதாக கூறப்படுகிறது.

# கரூர் எம்எல்ஏ எம்.ஆர்.விஜயபாஸ்கர் ராஜினாமா!



சென்னை, ஜூன். 29–

அதிமுகவின் முன்னாள் அமைச்சரும், கரூர் சட்டசபை எம்எல்ஏயுமான எம்.ஆர். விஜயபாஸ்கர் தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். கரூர் அதிமுக எம்எல்ஏ முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர். இவர் சென்னை தலைமைச் செயலகத்தில் சபாநாயகரை சந்தித்து ராஜினாமா கடிதம் அளித்துவிட்டு காரில் புறப்பட்டு சென்றார். அவர் நிருபர்களை சந்தித்து விளக்கம் அளிக்காமல் சென்றுவிட்டார்.

பிறகு எம்.ஆர். விஜயபாஸ்கர் பதவி ராஜினாமா ஏற்கப்பட்டதாக சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் அறிவித்தார். ஏற்கனவே இசக்கி சுப்பையா, மரகதம் குமரவேல், ஜெயக்குமார், விஜயபாஸ்கர் உள்ளிட்ட 5 அதிமுக எம்.எல்.ஏ.க்கள் தங்களது பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர். தற்போது கரூர் எம்எல்ஏ எம்.ஆர்.விஜயபாஸ்கரும் பதவியை ராஜினாமா செய்தால், அதிமுகவின் எம்எல்ஏக்கள் எண்ணிக்கை 41 ஆக குறைந்துள்ளது.

தவெக பொது செயலாளர் ஆனந்த் முன்னிலையில் நடைபெறவுள்ள இணைப்பு நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர். விஜயபாஸ்கருடன் சேர்ந்து கரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான அதிமுக நிர்வாகிகள் தவெகவில் இணைய உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

# முன்னாள் திமுக அமைச்சர் சிவசங்கர் மீது மோசடி புகார்!



சென்னை, ஜூன். 29–

போக்குவரத்துத்துறையில் வேலை வாங்கித் தருவதாக ரூ.23 லட்சம் மோசடி செய்ததாக முன்னாள் திமுக அமைச்சர் சிவசங்கர் மீது ஓய்வுபெற்ற போலீஸ் அதி காரி புகார் அளித்துள்ளார்.

திமுக ஆட்சியில் போக்கு வரத்துத்துறை அமைச்சராக இருந்தவர் சிவசங்கர். இவர் மீது காவல் ஆணையகரத்தில் ஓய்வு பெற்ற எஸ்எஸ்ஐ சீனிவாசன் ஒரு பரபரப்பு புகார் ஒன்றை அளித்துள்ளார். அந்தப் புகார் மனுவில்; எனது மகனுக்கு போக்குவரத்துத்துறையில் அரசு வேலை வாங்கித் தருவதாகக் கூறி, அப்போ தைய அமைச்சர் சிவசங்கர் ரூ.23 லட்சம் கேட்டார். அவருக்கு நெருக்கமானவர் எனக் கூறி இளஞ்செழியன் என்பவர் வங்கிக் கணக்குகளில் இந்தப் பணத்தை செலுத்தினேன். மேலு, சென்னை தலைமை செயலகத்தில் அமைச்சர் சிவசங்கரையும் சந்திக்க இளஞ்செழியன் ஏற்பாடு செய்தார்.

இந்த சந்திப்பின் போது, எனது மகனுக்கு போக்குவரத்து துறையில் வேலை உறுதியாகி விட்டதாகவும், பயப்பட வேண்டாம் வேலை கிடைத்துவிடும் என்று சிவசங்கர் உறுதியளித்தார். நீங்கள் கொடுத்த பணம் தன்னிடம் வந்து விட்டதாக அவர் உறுதிபடுத்தினார். பணத்தை வாங்கிக் கொண்டு வேலை கொடுக்காமல் இளஞ்செழியனும், சிவசங்கரும் ஏமாற்றி விட்டனர். அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்தப் புகாரைத் தொடர்ந்து, முதற்கட்டமாக இளஞ்செழியன் மீது சென்னை அசோக் நகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணையை துவக்கியுள்ளனர். ஏற்கனவே போக்குவ ரத்துத்துறையில் வேலை வாங்கித் தருவதாக மோசடி செய்த வழக்கில் திமுக எம்எல்ஏவும், முன்னாள் அமைச்சருமான செந்தில் பாலாஜி சிக்கியுள்ள நிலையில், மற்றொரு முன்னாள் அமைச்சரும் இந்த மோசடியில் ஈடுபட்டிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# 300 ஏசி மினி பஸ்கள் டெண்டர் ரத்து!

சென்னை, ஜூன். 29–

சென்னை மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் வாங்கவிருந்த 300 ‘ஏசி’ மினி பஸ்களுக்கான டெண்டர், திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது.

கூடுதலாக 300 ‘ஏசி’ புதிய மினி பேருந்துகள் வாங்குவது குறித்து, பிப்., 28ல் வெளியிடப்பட்ட டெண்டர் திறக்கப்படவிருந்த நிலையில், திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது. மக்கள் தொகைக்கு ஏற்ப பேருந்துகள் இல்லாத நிலையில், புதிய பேருந்துகள் வாங்க டெண்டர் வெளியான நிலையில், அடுத்தடுத்து டெண்டர் ரத்து செய்யப்படுவதற்கு காரணம் தெரியாததால் சர்ச்சை கிளம்பியுள்ளது. போக்குவரத்து துறை அதிகாரி கூறியதாவது: சென்னை மாநகர போக்குவரத்து கழகம் மற்றும் மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில், சென்னையின் முக்கிய வழித்தடங்கள் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களையும் இணைக்கும் வகையில், 220 மினி பேருந்துகள் வாங்க டெண்டர் விடப்பட்டுள்ளது. அந்த டெண்டர் ரத்து செய்யப்படவில்லை.

மாநகர போக்குவரத்து கழகம் சார்பில், தனியார் ஒப்பந்தத்தில் இயக்கப்படுவதற்காக 300 ‘ஏசி’ மினி பஸ்களுக்கான டெண்டர் விடப்பட்டிருந்தது. அதுவே தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளது; கடந்த வாரம் 500 பேருந்துகளுக்கான டெண்டர் ரத்தானது.


அடுத்தடுத்து இரு டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில், சென்னை மாநகர போக்குவரத்து கழகத்திற்கு, 1,000 மின் பேருந்துகளை வாங்க டெண்டர் விடப்பட்டு, அடுத்த மாதம் 13ம் தேதி, அது திறக்கப்பட உள்ளது. அந்த டெண்டர் என்ன ஆகுமோ என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# நடிகர் சங்கத் தேர்தல் வழக்கு... ஜூலை 1-ல் உயர்நீதிமன்றம் தீர்ப்பு!



சென்னை, ஜூன். 29–

தென்னிந்திய நடிகர் சங்க நிர்வாகிகளின் பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டதை எதிர்த்துத் தொடரப்பட்ட முக்கிய வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் வரும் ஜூலை 1ம் தேதியன்று தனது இறுதித் தீர்ப்பைப் பிறப்பிக்கவுள்ளது. தற்போதைய நிர்வாகிகளின் பதவிக்காலம் செல்லுமா அல்லது மீண்டும் தேர்தல் நடத்த உத்தரவிடப்படுமா என்பது இந்தத் தீர்ப்பின் மூலம் தெரிய வரும்.



## சினிமா துளிகள்..!

## ஹாலிவுட் பாலிவுட் கோலிவுட்டில் அடுத்தடுத்த அப்டேட்கள்!

**ஹாலிவுட்**

ஹாலிவுட் நடிகர் Tyrese Gibson இந்தியா பயணத்தை “வாழ்க்கையை மாற்றிய ஆன்மிக அனுபவம்” என்று கூறியுள்ளார். மும்பையில் சிவபூஜையில் பங்கேற்று, இந்திய ஆன்மிக பாரம்பரியத்தை பாராட்டியுள்ளார்.

Chris Hemsworth நடிக்கும் Extraction 3 படத்தின் படப்பிடிப்பு ஆஸ்திரேலியாவில் தொடங்கியுள்ளது. அதிரடி ரசிகர்களிடம் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

ஜூன் இறுதி வார OTT வெளியீடுகளில் Avatar: Fire and Ash, House of the Dragon Season 3, The Bearஉள்ளிட்ட பல முக்கிய தொடர்கள் மற்றும் படங்கள் வெளியாகியுள்ளன.

**பாலிவுட்**

நடிகை Jacqueline Fernandez முதல் முறையாக முழுநீள திகில் (Horror) படத்தில் நடிக்க உள்ளார். படப்பிடிப்பு ஜூன் இறுதியில் தொடங்குகிறது.

இந்த வார OTT தளங்களில் Raja Shivaji, Gram Chikit–salay Season 2 உள்ளிட்ட பல புதிய படங்கள் மற்றும் தொடர்கள் வெளியாகியுள்ளன.

**கோலிவுட்**

Vijay நடித்துள்ள Jana Nayagan திரைப்படத்தின் வெளியீட்டு தேதி மீண்டும் மாற்றப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ் திரைப்படமான Karuppu உலகளவில் OTT தளத்தில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வேலை வாய்ப்பு

## நாடு முழுவதும் AIIMS–ல் 2668 காலிப்பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: AIIMS அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் (All India Institutes of Medical Sciences)

அறிவிப்பு எண்: 93/2026 (தேதி: 13/06/2026)

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

பணி முறை: நிரந்தரப் பணி

தேர்வின் பெயர்: பொது ஆட்சேர்ப்புத் தேர்வு 5 (CRE–5)

மொத்தக் காலிப்பணியிடங்கள்: 2668 (குரூப் B மற்றும் C பதவிகள்)

பணிபுரியும் இடம்: இந்தியா முழுவதும்

விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 13.06.2026

விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 03.07.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (Online)

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://AIIMSexams.ac.in/

# திருமலை திருப்பதி தேவஸ்தானம் தரிசன டிக்கெட்டில் புதிய மாற்றம்!

திருப்பதி, ஜூன். 29–

பக்தர்களின் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கில், திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஆன்லைன் தரிசன டிக்கெட் முறையிலும் மாற்றங்களை அறிவித்துள்ளது.

தினசரி வழங்கப்படும் 800 ஆன்லைன் டிக்கெட்டுகளில், 300 டிக்கெட்டுகள் ஸ்ரீவாணி அறக்கட்டளைக்கு ரூ.10,000 நன்கொடை வழங்கியவர்களுக்கு ஒதுக்கப்படும்.

இந்தச் சலுகை பெற, 2025 மே 1–க்கு பிறகு ஸ்ரீவாணி அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கியிருக்க வேண்டும்.

பயன்படுத்தப்படாத டிக்கெட்டுகள் பின்னர் ஸ்பாட் புக்கிங் ஒதுக்கீட்டிற்கு மாற்றப்படும் என்றும் TTD தெரிவித்துள்ளது.

# கிரிக்கெட்டுக்கு குட்பை சொன்ன மாவீரன்! பென் ஸ்டோக்ஸ்!



இங்கிலாந்து டெஸ்ட் கேப்டன் ஜாம்பாவன் பென் ஸ்டோக்ஸ், நியூசிலாந்துக்கு எதிரான தொடர் முடிந்ததும் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இது கிரிக்கெட் ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ட்ரென்ட் பிரிட்ஜில் நடக்கும் இந்த மூன்றாவது டெஸ்ட் போட்டி ஜூன் 29 அன்று முடிவடைகிறது. இதுவே அவரது கடைசி சர்வதேச போட்டியாக அமையும்.

# திருப்பதியில் மொட்டை அடித்த ஆனந்த் அம்பானி! ரூ.27.5 கோடி மதிப்பிலான 25 EV பேருந்துகள் நன்கொடை

திருப்பதி, ஜூன் 29–

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும், முகேஷ் அம்பானியின் இளைய மகனுமான ஆனந்த் அம்பானி, திருப்பதி ஏழுமலையான் கோயிலில் சுப்ரபாத சேவையில் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தார்.

பக்தி அடையாளமாக முடிகாணிக்கையும் (மொட்டை) செலுத்தினார். அதனைத் தொடர்ந்து, திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு (TTD) ரூ.27.5 கோடி மதிப்பிலான 25 மின்சார (EV) பேருந்துகளை நன்கொடை யாக வழங்குவதாக அறி வித்தார். மேலும், பேருந்து களை இயக்க 50 ஓட்டுநர்க ளின் சம்பளம், சார்ஜிங் நிலையங்கள் உள்ளிட்ட செலவுகளையும் ரிலையன்ஸ் நிறுவனமே ஏற்கும் என தெரிவித்துள்ளது.


இந்த நன்கொடை மூலம் திருமலைக்கு வரும் பக்தர்களின் போக்குவரத்து வசதி மேலும் மேம்படும் என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# ‘விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை த.வெ.க. அரசு மிரட்டுகிறது’ - மு.க.ஸ்டாலின்!



சென்னை, ஜூன் 29–
தனது போலி பிம்பத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் முதல்–அமைச்சரின் எண்ணம் நீண்டகாலம் நீடிக்காது என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**போதைப்பொருள் சர்ச்சை**

த.வெ.க. அரசின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் டி.சரத்குமார், பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்துவது போன்ற வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாக பரவி சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த வீடியோ குறித்து விளக்கமளித்த அமைச்சர் டி.சரத்குமார், தனது குழந்தைக்கு மாத்திரையை பொடியாக்கி கொடுத்ததாகவும், தவறான தகவல்களை பரப்ப வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

**தி.மு.க. ஆர்ப்பாட்டம்**

இருப்பினும், இந்த விளக்கத்தை ஏற்க மறுத்து, அமைச்சர் டி.சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி தி.மு.க. மாணவர் அணி சார்பில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் சென்னை எழும்பூரில் தி.மு.க. மாணவர் அணியினர் ஆர்ப்பாட்டத்திற்கான மேடை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்களை தடுத்து நிறுத்திய போலீசார், ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு உரிய அனுமதி பெறாததால் மேடை அமைக்க அனுமதிக்க முடியாது என கூறினர்.

**கைது**

இதையடுத்து தி.மு.க. மாணவர் அணி நிர்வாகிகளுக்கும், போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றவர்களை போலீசார் கைது செய்து காவல்துறை வாகனங்களில் அழைத்துச் சென்றனர்.

**மு.க.ஸ்டாலின் கண்டனம்**

இந்நிலையில், விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை த.வெ.க. அரசு மிரட்டுகிறது என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ‘எக்ஸ்’ தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;–

“போதைப் பொருள் பயன்படுத்தியது போல், “Thug Life” Story போட்ட அமைச்சருக்கு எதிராகப் போராட்டம் செய்த தி.மு.க. வினர் கைது! த.வெ.க. ஆட்சியை விமர்சிப்பதால், முன்னாள் அமைச்சர் சிவசங்கர் மீது வழக்கு! முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு வீட்டில் ரெய்டு!

**நீண்டகாலம் நீடிக்காது**

இப்படி விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை மிரட்டியும், ஊடகங்களுக்கு பதில் அளிக்காமலும் கட்டமைக்கப்பட்ட, தன் போலி பிம்பத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் முதல் – அமைச்சரின் எண்ணம் நீண்டகாலம் நீடிக்காது!

அதிகாரத்தை வைத்து ஆட்டம் போடுபவர்களின் அகங்காரம் அடங்கும்! “டேக் டைவர்ஷன்... டேக் டைவர்ஷன்” என ஓடும் இந்த ரீல்ஸ் ஆட்சிக்கு, மக்களே பாடம் புகட்டுவார்கள்!”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கரூர் செல்கிறார் முதலமைச்சர் விஜய்?



சென்னை, ஜூன். 29–
கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 27–ந்தேதி தவெக பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியாகினர்.

இந்த சம்பவத்தையடுத்து தவெக தலைவர் விஜய் மற்றும் கட்சி சார்பில் தலா ரூ.20 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு பணம் நேரடியாக செலுத்தப்பட்டது.

பாதுகாப்பு மற்றும் பல்வேறு நிர்வாகக் காரணங்களால், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சென்னைக்கு வரவழைத்து மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் நேரில் சந்தித்து விஜய் ஆறுதல் கூறினார்.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கை ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி அஜஸ் ரத்தோகி கண்காணிப்பில் சிபிஐ அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள்.

இந்நிலையில் கரூர் சம்பவத்தில் பலியானோரின் குடும்பத்தினரை முதலமைச்சர் விஜய் சந்திக்க உள்ளதாகவும், ஜூலை 2–வது வாரத்தில் அவர் கரூர் செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

# உதவி பேராசிரியர் தேர்வு முடிவில் முறைகேடு?



சென்னை, ஜூன். 29–
அரசு கல்லூரிகளுக்கு உதவி பேராசிரியர்களை தேர்வு செய்வதற்காக நடத்தப்பட்ட தேர்வில், ஆங்கில பாடத் தேர்வு முடிவுகளில், தேர்வர்களை அடையாளப்படுத்த, வண்ண குறியீடுகள் இருப்பதாக புகார் எழுந்து உள்ளது. தமிழகத்தில், அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில், 8,000க்கும் அதிகமான உதவி பேராசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் சார்பில், 2,708 உதவி பேராசிரியர்களை தேர்வு செய்வதற்கான அறிவிப்பை, ஆசிரியர் தேர்வு வாரியம், கடந்த ஆண்டு வெளியிட்டது. தேர்வுக்கு, 47,047 பேர், விண்ணப்பித்தனர். டிசம்பர் 27ல் தேர்வு நடந்தது. 42,064 பேர் தேர்வு எழுதினர். இதற்கான முடிவுகள், கடந்த 25ம் தேதி வெளியானது.

இவற்றில், பல்வேறு குளறுபடிகள் நடந்திருப்பதாக, கவுரவ விரிவுரையாளர்களும், தேர்வர்களும் குற்றம் சாட்டி வருகின்றனர். ‘தாள் 2ல், ஒரு கேள்விக்கு 10 மதிப்பெண்கள் வீதம், ஐந்து கேள்விகளுக்கு 50 மதிப்பெண்கள் இடம் பெற்றன. ‘அதில், சிலருக்கு 49 மதிப்பெண், சிலருக்கு பூஜ்யம் மதிப்பெண் வழங்கப்பட்டு உள்ளது. குறிப்பாக, பணி மூப்பில் முன்னிலையில் இருப்பவர்களுக்கு, ஒற்றை இலக்க மதிப்பெண்களே வழங்கப்பட்டு உள்ளன’ என, குற்றச்சாட்டு எழுந்தது.

அதைத் தொடர்ந்து, உதவி பேராசிரியர் தேர்வு முடிவில், அடுத்த பரபரப்பு கிளம்பியுள்ளது. ஆங்கில பாடத் தேர்வு முடிவில், சில தேர்வர்களின் மதிப்பெண்கள், மஞ்சள், நீலம் உட்பட பல வண்ணங்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ரகசிய குறியீடுகள் ஏன் என, தேர்வர்கள், கேள்வி எழுப்பி உள்ளனர். இந்த தேர்வை ரத்து செய்து, முறைகேடுகள் தொடர்பாக, சி.பி.ஐ., விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என, பள்ளிக்கல்வித்துறை செயலர், கல்லூரி கல்வி கமிஷனர் ஆகியோரை இன்று சந்தித்து மனு அளிக்க உள்ளதாக, தமிழ்நாடு அனைத்து அரசு கல்லூரி யு.ஜி.சி., தகுதி கவுரவ விரிவுரையாளர்கள் சங்கத்தின், மாநில தலைவர் தங்கராஜ் அறிவித்துள்ளார்.

# காலையில் செல்லும் கோப்புகளுக்கு மாலைக்குள் முதல்வர் விஜய் கையெழுத்து!



சென்னை, ஜூன். 29–
காலையில் அனுப்பப்படும் கோப்புகளில், முதல்வர் விஜய் கையெழுத்திட்டு, மாலைக்குள் அனுப்பி வைப்பது, அதிகாரிகளிடம் வியப்பை ஏற்படுத்தி உள்ளது.

தமிழக முதல்வராக விஜய் பொறுப்பேற்றது முதல், காலை, 9:30 முதல் 10 மணிக்குள், தலைமை செயலகம் வருகிறார். மாலை, 6:00 மணி வரை பணிகளை கவனித்து விட்டு செல்கிறார். மாறுபட்டவர் தினமும் அமைச்சர்களின் அலுவலகங்கள், துறைகளின் செயலர் அலுவலகங்களில் இருந்து, திட்டங்கள் செயலாக்கம், நிதி தேவை என, பல்வேறு கோப்புகள் முதல்வர் அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்றன.

காலையில் அனுப்பப்படும் கோப்புகளில், முதல்வர் விஜய் கையெழுத்திட்டு, மாலைக்குள் மீண்டும் துறை செயலர்களின் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கிறார். இது, அதிகாரிகளிடம் வியப்பை ஏற்படுத்தி உள்ளது. மூத்த ஐ.ஏ.எஸ்., அதிகாரி ஒருவர் கூறியதாவது:

நான் கருணாநிதி, ஜெயலலிதா, பழனிசாமி, ஸ்டாலின் உள்ளிட்ட முதல்வர்களிடம் பணியாற்றி உள்ளேன். ஆனால், முதல்வர் விஜய் மாறுபட்டவராக உள்ளார். மற்ற முதல்வர்கள், அரசு நிர்வாக பணியுடன், அரசியல் பணியையும் மேற்கொள்வர்.

முதல்வர் விஜய், அரசு நிர்வாக பணிகளை மட்டுமே தலைமை செயலகத்தில் மேற்கொள்கிறார். மாலை வரை தலைமை செயலகத்தில் இருப்பதால், முன்னர் இருந்த முதல்வர்களை விட, கூடுதல் நேரம் அவருக்கு கிடைக்கிறது. கமிஷன் பிரச்னை எனவே, கோப்புகளில் விரைந்து கையெழுத்திட்டு அனுப்புகிறார். கோப்புகள் நாள் கணக்கில் காத்திருந்த நிலை மாறி, மணிக்கணக்கில் திரும்பி வருகின்றன.

முன்னாள் முதல்வர் ஸ்டாலின், சற்று வேகமாகவே பணியாற்றினார். ஆனால், அவரிடம் செல்லும் கோப்புகள் திரும்பி வர, குறைந்தபட்சம் இரண்டு நாட்களாகும். அமைச்சர்களிடம் அனுமதி பெற்று, பல பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலை, முந்தைய ஆட்சி காலங்களில் இருந்தது.

கமிஷன் தொடர்பான பிரச்னைகளால், முந்தைய அமைச்சர்களுக்கு, திட்டத்தை புரியவைத்து அனுமதி பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. அந்த நிலை இப்போது இல்லை.

அமைச்சர்களும் உடனுக்குடன் கோப்புகளில் கையெழுத்திடுகின்றனர். அதிகாரிகள் முடிவெடுக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது. இந்த நிலை அடுத்த ஐந்து ஆண்டுகள் தொடர்ந்தால், தமிழகம் இரண்டு மடங்கு வேகமாக வளர வாய்ப்புள்ளது. இவ்வாறு அந்த அதிகாரி கூறினார்.

# மு.க.ஸ்டாலின் 5-ந் தேதி லண்டன் பயணம்!



சென்னை, ஜூன். 29–
தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினின் பேரனும், இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினின் மகனுமான இன்பநிதி லண்டனில் படித்து வந்தார். ஸ்போர்ட்ஸ் டெவலப்மெண்ட் சம்பந்தமான பட்டப்படிப்பு படித்த அவர் படித்து முடித்து தற்போது சென்னையில் உள்ளார். கலைஞர் டி.வி.யில் நிர்வாக பயிற்சி மேற்கொண்ட அவர் ரெட்ஜெண்ட் நிறுவனத்தை கவனித்து வருகிறார்.

லண்டன் மான்செஸ்டர் நகரில் இன்பநிதி படித்த கல்லூரியில் அவருக்கு பட்டம் வழங்கப்பட உள்ளது. இதற்கான பட்டமளிப்பு விழா அடுத்த மாதம் நடைபெற உள்ளது. பட்டமளிப்பு விழாவை நேரில் காண்பதற்காக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வருகிற 5–ந்தேதி அதிகாலையில் லண்டன் புறப்பட்டு செல்கிறார். அவருடன் மனைவி துர்கா ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், மகன் இன்பநிதி ஆகியோரும் லண்டன் செல்கின்றனர்.

சுமார் 10 நாட்கள் லண்டனில் தங்கி இருக்கும் மு.க.ஸ்டாலின் அதன் பிறகு சென்னை திரும்புவார் என தெரிகிறது.

# தமிழ்நாடு முழுவதும் ஆவின் பால் விநியோகம் குறைப்பு!



சென்னை, ஜூன். 29–
பால் கொள்முதலில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை காரணமாக, அரசுக்குச் சொந்தமான பால் கூட்டுறவு நிறுவனமான ‘ஆவின்’, தமிழ்நாடு முழுவதும் பால் விநியோகத்தை தற்காலிகமாகக் குறைத்துள்ளது; இதனால் பல சில்லறை விற்பனை நிலையங்களில் பால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சென்னையில், ஏப்ரல் மாதத்தில் சுமார் 16 லட்சம் லிட்டராக இருந்த தினசரி பால் விநியோகம், தற்போது சுமார் 13.5 லட்சம் லிட்டராக குறைந்துள்ளது. மாநிலம் முழுவதும் பால் விநியோகம் கிட்டத்தட்ட 30 சதவீதம் குறைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிக கொள்முதல் விலையையும், சரியான நேரத்தில் பணப்பட்டுவாடாவையும் வழங்கும் தனியார் பால் நிறுவனங்களை நோக்கி பால் உற்பத்தியாளர்கள் மாறியதே இந்த பற்றாக்குறைக்கு காரணம் என்று கூறப்படுகிறது. மேலும், பல மாவட்டங்களில் ஆவின் நிறுவனத்திடமிருந்து ஊக்கத்தொகை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதும் பால் சேகரிப்பைப் பாதித்துள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டினர்.

இருப்பினும், இந்தத் தட்டுப்பாடு தற்காலிகமானது என்றும், கோடைக்காலத்தில் பால் உற்பத்தி குறைந்ததே இதற்கு முக்கியக் காரணம் என்றும்,

பருவநிலை மாற்றங்களுடன் பால் கொள்முதல் அளவு படிப்படியாக அதிகரித்து வருவதாகவும், விரைவில் இயல்பான விநியோகம் மீட்டெடுக்கப்படும் என்றும் ஆவின் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

பால் விநியோகத்தில் பற்றாக்குறை இருந்தபோதிலும், பால் விலையை உயர்த்தும் திட்டம் எதுவும் தற்போது இல்லை என்றும் ஆவின் நிர்வாகம் உறுதிப்படுத்தி உள்ளது.

# இடைத்தேர்தலில் ‘மாஸ்’ காட்டும் திருச்சி கிழக்கு தொகுதி!




சென்னை, ஜூன். 29–
தமிழகத்தில் காலியாக உள்ள திருச்சி கிழக்கு, மதுராந்தகம், தாராபுரம், பெருந்துறை, விராலிமலை, அம்பாசமுத்திரம் ஆகிய சட்டசபை தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்து வரும் நிலையில், 6 தொகுதிகளிலும் இப்போதே தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த சட்டசபை தேர்தலில் முதல்–அமைச்சர் விஜய், திருச்சி கிழக்கு, பெரம்பூர் ஆகிய தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பிறகு, திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை அவர் ராஜினாமா செய்தார். இதனால், திருச்சி கிழக்கு தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது.

**திருச்சி கிழக்கில் போட்டா போட்டி**

இதேபோல், சட்டசபையில் த.வெ.க. அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில், அரசுக்கு ஆதரவாக வாக்களித்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களில் மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), சத்யபாமா (தாராபுரம்), ஜெயக்குமார் (பெருந்துறை), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்), டாக்டர் சி. விஜயபாஸ்கர் (விராலிமலை) ஆகியோர் தங்களுடைய எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தனர். இதில், டாக்டர் சி.விஜயபாஸ்கரை தவிர ஏனைய 4 பேரும் த.வெ.க.வில் இணைந்துவிட்டனர்.

ஆளுங்கட்சியான த.வெ.க., இடைத்தேர்தலில் மதுராந்தகம், தாராபுரம், பெருந்துறை, அம்பாசமுத்திரம், விராலிமலை ஆகிய தொகுதிகளில் ஏற்கனவே அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்று, பதவிகளை ராஜினாமா செய்தவர்களுக்கே மீண்டும் வாய்ப்பு அளிக்கும் என்று தெரிகிறது. அதே நேரத்தில், முதல்–அமைச்சர் விஜய் ராஜினாமா செய்த திருச்சி கிழக்கு தொகுதியைத்தான் யாருக்கு ஒதுக்குவது என்பதில் போட்டா போட்டி நிலவுகிறது.

**மு.க.ஸ்டாலினை போட்டியிட வைக்க முயற்சி**

நம்பிக்கை வாக்கெடுப்பில் த.வெ.க. அரசுக்கு ஆதரவு அளித்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், திருச்சி கிழக்கில் போட்டியிட வாய்ப்பு கேட்பதாக கூறப்படுகிறது. அதே நேரத்தில், அ.தி.மு.க.வில் இருந்து த.வெ.க.வில் இணைந்த 3 மூத்த நிர்வாகிகளும் அந்தத் தொகுதியை குறிவைத்து கேட்டுவருவதாக கூறப்படுகிறது. ஆனால், தவெகவோ அக்கட்சியில் நீண்ட காலம் பயணித்து வரும் முக்கிய நிர்வாகிகளுக்கு ஒதுக்கலாமா என்று யோசித்து வருகிறது. இப்படி, த.வெ.க.வில் திருச்சி கிழக்கு தொகுதியை பெறுவதில் கடும் போட்டி நிலவுகிறது.

அதே நேரத்தில், எதிர்க்கட்சியான திமுகவில், திருச்சி கிழக்கு தொகுதியில் முன்னாள் முதல்–அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலினை போட்டியிட வைக்க முயற்சி நடைபெறுகிறது. அக்கட்சியின் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு இதற்கான முயற்சியில் இறங்கியுள்ள நிலையில், ‘‘எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொள்கிறேன். சரி என்று மட்டும் சொல்லுங்கள்’’ என்று மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது மனைவி துர்கா ஆகியோரிடம் கூறிவருகிறார்.

**காரணம் என்ன?**

முன்னாள் அமைச்சர் கே. என்நேருவின் இந்த ஆர்வத்துக்கு வேறுவொரு முக்கிய காரணமும் சொல்லப்படுகிறது. தற்போதைய எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலினின் நண்பரும், முன்னாள் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டசபை தேர்தலில் தோல்வியை தழுவினார். எனவே, திருச்சி கிழக்கு தொகுதியில் அவர் போட்டியிட விரும்புவதாக கூறப்படுகிறது. ஏற்கனவே, கே.என். நேருவுக்கும், அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கும் முட்டல்–மோதல் இருந்து வருவதாக அக்கட்சியினரே கூறுகின்றனர். எனவே, அன்பில் மகேஸ் பொய்யாமொழி போட்டியிடுவதை தடுக்க மு.க.ஸ்டாலின் களம் இறங்கினால் மட்டுமே முடியும் என்ற எண்ணத்திலேயே கே.என்.நேரு இவ்வாறு கூறிவருவதாக தெரிகிறது.

அ.தி.மு.க.வை பொறுத்தவரை திருச்சி கிழக்கு தொகுதியில் யாரை களம் இறக்குவது என்று இன்னும் முடிவு செய்யவில்லையாம். த.வெ.க., தி.மு.க.வில் மூத்த நிர்வாகிகள் போட்டியிட்டால், குறிபிட்ட அந்தத் தொகுதியில் மட்டும் வேட்பாளரை இறக்காமல் இடைத்தேர்தலை புறக்கணித்துவிடலாம் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கருதுகிறாராம். ஆனாலும், இடைத்தேர்தல் புறக்கணிப்பு முடிவால் வேறு எதுவும் பிரச்சினை வருமா? என்றும் யோசித்து வருகிறாராம்.

**2–வது இடத்தில் அம்பாசமுத்திரம்**

இப்படி, திருச்சி கிழக்கு தொகுதி, 6 தொகுதி இடைத்தேர்தலில் முக்கியத்துவம் பெறுகிறது. அடுத்து, அம்பாசமுத்திரம் தொகுதியில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் போட்டியிட இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அதுவும், பொது வேட்பாளராக அவர் நிறுத்தப்பட வாய்ப்பு இருப்பதாக கூறப்படுவதால், ‘மாஸ்’ காட்டுவதில் 2–வது இடத்தில் அம்பாசமுத்திரம் தொகுதி இருக்கிறது. எனவே, நடந்து முடிந்த சட்டசபை பொதுத் தேர்தலைப் போல, நடைபெற உள்ள இடைத்தேர்தலிலும் பரபரப்புக்கும், விறுவிறுப்புக்கும் பஞ்சம் இருக்காது என்றே தெரிகிறது.

# வெனிசுலாவில் நிலநடுக்கம்: செயற்கைக்கோள் படங்களில் வெளிவந்த பேரழிவுக்காட்சிகள்!




வெனிசுலா, ஜூன். 29–
கடந்த 24ம் தேதி, தென் அமெரிக்க நாடான வெனிசுலாவின் தலைநகர் கராகசுக்கு மேற்கே, 160 கி.மீ., தொலைவில் உள்ள மொரோன் கடற்கரை பகுதிக்கு அருகில், 39 வினாடி இடைவெளியில் அடுத்தடுத்து இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. முதல் நிலநடுக்கம் 7.2 ரிக்டர் அளவுக்கு, தரையில் இருந்து 26 கி.மீ., ஆழத்தில் ஏற்பட்டது. இரண்டாவது நிலநடுக்கம் 7.5 ரிக்டர் அளவுக்கு, 10 கி.மீ., ஆழத்தில் பதிவானது. இதில், நாடு முழுவதும் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது. கடந்த 125 ஆண்டுகளில் வெனிசுலாவைத் தாக்கிய மிக மோசமான நிலநடுக்கமாக இது கருதப்படுகிறது.

இந்நிலையில், விண்வெளியில் இருந்து எடுக்கப்பட்ட அதிநவீன செயற்கைக்கோள் படங்கள், அந்நாட்டில் ஏற்பட்டுள்ள கோரப் பேரழிவை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

வெளியாகியுள்ள செயற்கைக்கோள் படங்களில், தலைநகர் காரகாசுக்கு அருகிலுள்ள கடலோர நகரங்களான லா குவைரா, காராபெலெடா மற்றும் பிளேயா கிராண்டே போன்ற பகுதிகள் முற்றிலும் உருக்குலைந்து போயிருப்பது தெரியவந்துள்ளது. நிலநடுக்கத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய படங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கம்பீரமாக நின்றுகொண்டிருந்த பல அடுக்குமாடி குடியிருப்புகள், சொகுசு விடுதிகள் மற்றும் தொழிற்சாலைகள் வெறும் இடிபாடுகளாகவும், தரைமட்டமான சாம்பல் மேடாகவும் காட்சியளிக்கின்றன.

தற்போதைய அதிகாரப்பூர்வ தகவல்களின்படி, இந்த நிலநடுக்கத்தால் இதுவரை 1,430க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 3,200க்கும் அதிகமானோர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், பல்லாயிரக்கணக்கானோர் இடிபாடுகளுக்குள் சிக்கி மாயமாகியுள்ளனர். மீட்புப் பணிக்கான மிக முக்கிய 72 மணி நேர அவகாசம், கடந்துவிட்டதால், உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020